Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR 59/2025

ஆயர் சுற்று மடல்

ஈசோ மெசியாவில் அன்பு நிறைந்த அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே! மற்றும் அன்பு இறைமக்களே! நம் ஆண்டவர் ஈசோ மெசியாவின் அருளும் தந்தையாம் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

உலகளாவிய கத்தோலிக்க திருச்சபை ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 11, லூர்து மாதா திருநாளில் உலக நோயாளிகள் தினத்தை கொண்டாடுகிறது. திருதந்தை இரண்டாம் ஜாண்பால் 1992 மே 13 ஆம் நாளை உலக நோயாளிகள் தினம் என அறிக்கையிட்டார். இறைமகன் ஈசோ; தமது 3 ஆண்டு பொது வாழ்வில் ஏராளம் நோயாளிகளை குணப்படுத்தியதாகப் பார்கிறோம். அம்மரபின் தொடர்ச்சியாக, பேய்களை ஓட்டவும், நோயாளிகளை குணப்படுத்தவும் அதிகாரத்தை திருத்தூதர்கட்கு வழங்கினார். திருத்தூதர்களின் வாரிசுகளான ஆயர்கள், அருட்தந்தையர்கள் வழி அம்மரபு இன்றும் திருச்சபையில் தொடர்கிறதை நாம் பார்கிறோம். அதுபோல, திருச்சபையின் அங்கமாகிய நாமும் பிறர் பிணிகளில் அவர்களை தாங்குகிறவர்களாகவும், ஆறுதல் கொடுப்பவர்களாகவும் வாழும் போதுதான் நமது வாழ்வும் மதிப்பு மிக்கதாக மாறும். எனவே, நோயாளிகள் தினத்தை பொருளுள்ளதாக மாற்ற நாம் என்னென்ன செய்யலாம் என இச்சுற்றுமடல் வாயிலாக தெரிவிக்க விரும்புகிறேன்.

'எதிர்நோக்கின் திருப்பயணிகளாக' திருச்சபை நம்மை அழைக்கின்ற இந்த கிறிஸ்து யூபிலி ஆண்டில் 33-வது உலக நோயுற்றோர் தினம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த யூபிலி ஆண்டின் செய்தியை திருத்தூதர் புனித பவுல் ஒரே வாக்கியத்தில் நமக்கு விளக்குகிறார் ”எதிர்பார்ப்பு நம்மை ஏமாற்றமடைய வைப்பதில்லை” (உரோ. 5:5). திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் இந்த இறைவார்த்தையை உலக நோயுற்றோர் தினத்திற்கான முக்கிய கருப்பொருளாக வைத்திருக்கிறார். இவை ஆறுதலளிக்கின்ற வார்த்தைகளாக இருந்தாலும், கொடிய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் இந்த இறைவார்த்தை புரிந்துகொள்வதற்கு கடினமாக இருக்கலாம். ஏனெனில், நோய் என்பது மனித வாழ்வில் ஏற்படும் ஒரு சோதனைக்காலம். இது நீடித்ததாகவும் தாங்க முடியாததாகவும் இருக்கலாம். நோய்களிலிருந்து குணமடையாதபோது, துன்பத்திலும் தனிமையிலும் நாம் மனமுடைந்து போகலாம். அப்பொழுது எதிர்பார்ப்பு இழந்து விரக்தியில் விழவும் வாய்ப்பு உருவாகலாம்.

ஆகவே, ஒவ்வொரு நோய்க்கும் பொருத்தமான சிகிச்சை முறைகளை நாம் பின்பற்ற வேண்டும். ஆனால் நோய்வாய்ப்பட்ட காலங்களில் நாம் கொண்டிருக்க வேண்டிய அணுகுமுறை, நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பின் மனப்பான்மையாக இருக்க வேண்டும். ” உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று” (மாற்கு 5:34, 36) என்று நற்செய்தியில் கிறிஸ்து தாம் குணப்படுத்தும் நோயாளிகளுக்கு திரும்பத் திரும்பச் சொல்வதை நாம் விவிலியத்தில் வாசிக்கிறோம். மனிதன் தன்னால் இயலாதவற்றையும் நம்பிக்கையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு நோயும் கடவுளின் கவனிப்பையும் இரக்கத்தையும் நெருக்கமாக அனுபவிக்க ஒரு வாய்ப்பு என்று திருத்தந்தை பிரான்சிஸ் தனது மறையுரையில் கூறுகிறார். இயேசுவின் மூன்று வருட வெளிப்படையான வாழ்க்கையின் போது, பலர் அவரிடமிருந்து குணமடைந்தனர். இயேசுவின் மீட்புப் பணியின் முக்கிய பகுதியாக நோயாளிகளை குணப்படுத்துதல் இருந்தது. இயேசுவோடு இணைந்திருந்து, குணப்படுத்துதலின் இணைப்பாளர்களாக மாற ஒவ்வொரு பராமரிப்பாளர்களும் முயற்சியெடுக்க வேண்டும். அது குடும்பங்களில், நிறுவனங்களில் அல்லது மக்கள் நல பணி இல்லங்களில் கூட ஆகலாம். நாம் நோயாளிகளை இரக்கத்துடன் பார்த்து பழக வேண்டும். நோயுற்றவர்களை சந்தித்து நம்மால் முடிந்தவரை அவர்களைப் பராமரிக்க வேண்டும்.

இந்த யூபிலி ஆண்டில் நோயுற்றோர் தினத்தைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, வரும் ஞாயிற்றுக்கிழமை, அதாவது 2025 பிப்ரவரி 16 ஆம் தேதி, நமது மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளிலும், நோயுற்றோர் தினமாகக் கொண்டாடப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். திருப்பலியின் போது இந்த கொண்டாட்டத்தை சிறப்பாக நடத்துவதற்கு தேவையான அனைத்து அறிவுரைகளும் அருட்தந்தையர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. கூடுதலாக, பக்த இயக்கங்கள் சார்பாக நோயாளிகளை சந்திப்பது, படுக்கையில் இருக்கும் நோயாளிகளுக்கு நற்கருணை வழங்குவது, ஒவ்வொரு குடும்பத்திலும் நோயாளிகளுக்காக சிறப்பு வேண்டுதல்கள் செய்வது போன்றவை அன்றைய நாளை சிறப்பு மிக்கதாக மாற்றும்.

நோயாளிகள் பராமரிப்பு தொடர்பான பணிகளைச் செய்ய நமது மறைமாவட்டத்தில் ‘‘மறைமாவட்ட நல வாழ்வு பணிக்குழு’’ உருவாக்கப்பட்டுள்ளது. இந்த குழுவின் பணிகள் அதன் இயக்குநர் அருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல் அவர்களின் தலைமையில் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் செயல்பாடுகளை மேலும் பயனுள்ளதாக்கி ஒவ்வொரு பங்கிலும் ஒரு பங்கு நலவாழ்வு பணிக்குழு தொடங்க விரும்புகிறேன். இது மாதர்ஜோதிஸ் மற்றும் மரியாயின் சேனை போன்ற பக்த இயக்கங்களை சேர்ந்தவர்கள் உட்பட ஆறு அல்லது ஏழு பேர் கொண்ட ஒரு சிறிய குழுவாக உருவாக்கப்பட வேண்டும். இதேபோல், வரும் ஞாயிற்றுக்கிழமைகளில், மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழுவின் தலைமையில், பங்குகளில் திருப்பலிக்குப் பிறகு, உடல் நலம் தொடர்பான தலைப்புகளில் விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தப்படும். இந்த எல்லா முயற்சிகளிலும் உங்கள் உண்மையான ஒத்துழைப்பை நான் எதிர்பார்க்கிறேன்.

அன்பார்ந்தவர்களே, நாம் அனைவரும் நோயுற்றவர்களை எதிர்பார்ப்புடன் இயேசுவின் முன் அர்ப்பணிப்போம். நோயாளிகளைப்

பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அனைவரையும் ஆண்டவர் வலுப்படுத்த ஜெபிப்போம். நலவாழ்வு பணிக்குழு சார்பில் மறைமாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளிலும் நாம் கைகோர்த்து, நோயுற்றோருக்கான ஊழியத்தில் எதிர்நோக்கின் திருப்பயணிகளாக ஒன்றாகப் பயணிப்போம். இறைவன் உங்கள் ஒவ்வொருவரையும் குறிப்பாக பங்கில் நோயால் அவதியுறுவோரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!.

ஈசோ மெசியாவில் அன்புடன்

ஆயர் இல்லம்
06.02.2025

✝ **ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்டம்

குறிப்பு : இச்சுற்றுமடலை பிப்ரவரி 09, 2025 ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்டத்திலுள்ள ஆலயங்கள், நிறுவனங்கள் என அனைத்திலும் திருப்பலிக்கு பின் வாசிக்க வேண்டும்.